1987 மே 5]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உயிரியல் முறையில் சுத்தம் செய்யப்பட்ட கழிவுநீர், புல் பண்ணைக்கு உபயோகப்படுத்தப்பட்டு எஞ்சியுள்ள சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் மட்டுமே கூவம் ஆற்றில் விடப்படுவதால் இப்பகுதியில் உள்ள கிணற்று நீர் மாசு படவோ, அதனால் உபயோகமற்றதாக மாறிவிடவோ வழியில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சென்னையில் "டிட்கோ" மூலம் அனல் மின் நிலையம் அமைத்தல்

592—(*வினா எண் 6796) திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் "டிட்கோ" மூலம் சென்னையில் அனல் மின் நிலையம் நிறுவ அரசு முடிவு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 210 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய அனல் மின் நிலையம் ஒன்றை சென்னையருகே உள்ள மணலியில் டிட்கோ மூலம் கூட்டுத் துறையில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. மைய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் மின் நிலையம் அமைக்கும் பணி தொடங்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாய் செலவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது? மேலும் தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் தொழில்பேட்டைகள், தொழிற்சாலைகள் எல்லாம் இருக்கின்றன. மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கிற காரணத்தால் டிட்கோ மூலம் மாவட்டங்களில் இப்படி அனல் மின் நிலையம் அமைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரையில் 1 மெகாவாட் உற்பத்திக்கு ரூ. 1 கோடி செலவு என்பது சாதாரண கணக்கு. இப்பொழுதிருக்கிற விலைவாசி ஏற்றத்தின் காரணமாக அது

அதிகரிக்கவும் கூடும். ஆனால் தற்போதுள்ள திட்டப்படி ரூ. 220 கோடி அளவில் இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. மேற் கொண்டு பல மின் நிலையங்களையும் அரசு நிறுவ எண்ணி யுள்ளது.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகிற தமிழ்நாட்டின் மின்சாரத் தேவை பூர்த்தி ஆவதற்கு டிட்கோ மூலம் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிற இன்றைய நிலையில், குறிப்பாக, கோவை மாவட்டத்தில், நீண்ட காலமாக ஒரு அனல் மின் நிலையம் அமைக்கப்பட வேண்டு மென்று கோரிக்கை இருந்து வருகிறது. ஆகவே, கோவையின் தேவையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு ஒரு அனல் மின் நிலையத்தை டிட்கோ மூலம் அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, ஏற்கனவே கோவை மாவட்டத்தில் இருக்கிற தொழில் அதிபர்கள் எல்லாம் சேர்ந்து ஜி. கே. தேவராஜ் தலைமையிலே கூடி ஒரு மின் நிலையத்தை உருவாக்குவதற்கு முன்னுரிமை தருவதற்கு முன் வந்தார்கள். அது நீண்ட காலம் ஆய்விலேயே இருந்து வந்திருக்கிறது. அவர்களும் பிறகு முன் வரவில்லை; நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால், டிட்கோ போன்ற நம்முடைய நிறுவனங்கள் பல மின் நிலையங்களை உருவாக்குவதிலே அக்கறை கொண்டிருக்கிறது. அதற்கு மைய அரசு அனுமதி அளித்த பிறகு, அவற்றிலே கவனம் செலுத்தப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் கூடங்குளத்தில் அணு மின் நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென மத்திய அரசிடம் மாநில அரசு வற்புறுத்துகிறது. ஆனால், காலதாமதம் ஆவதால் மாநில அரசே அந்த அணு மின் நிலையத்தை ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை, தனிக் கேள்வி போடவும். அதோடு, மின்சாரத் துறையைச் சேர்ந்த கேள்விகள் இவை; என்னுடையது தொழில் துறையைப் பற்றியது மட்டும் தான்.

1987 மே 5]

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், டிட்கோ மூலம் அனல் மின் நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசுக்கு அனுமதிக்காக அனுப்பியிருக்கிறோம் என்று அறிவித்தார்கள். இன்று காலை பத்திரிகையில் மாநிலங்களில், குறிப்பாக, தமிழகத்திலே துவங்குகிற அனல் மின் நிலையங்களுக்கு மற்ற இடங்களிலேயிருந்து நிலக்கரி வாங்குவதற்கு அனுமதி இல்லை யென்று மத்திய அரசு அறிவித்திருக்கிறதே, அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, நிலக்கரியைப் பொறுத்தவரையில் நான் நேற்று முன்தினம் பிரதமரிடம் போய், பேசும்போது, அங்கே திரு. வசந்த் சாத்தே வந்திருந்தார்கள். அவர்களிடம் பேசும்போது, சிலவற்றைக் கேட்கும்போது, நிலக்கரி ஏற்கனவே இந்தியாவிலே இருக்கிறது. ஆகவே, எதற்காக நிலக்கரி என்ற செய்தியை என்னிடத்தில் சொன்னார்கள். அதுதான் தெரியுமே தவிர, முழு விவரத்தையும் மின்சாரத்துறை அமைச்சரிடம் கேட்டுப் பெறலாம்.

நெல்லை மாவட்டம், வல்லநாடு தாமிரபரணி ஆற்றிலிருந்து குடிநீர்

593—(*வினா எண் 9240) **திரு. எஸ். [redacted] டேனியல்ராஜ் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் வல்லநாடு தாமிரபரணி ஆற்றில் இருந்து அந்த பகுதியைச் சுற்றியுள்ள கிராம மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வல்லநாட்டிற்கு அருகேயுள்ள தாமிரபரணி ஆற்று நீரைக் குழாய்களின் மூலமாகத் தூத்துக்குடி நகருக்குக் கொண்டு செல்கிறார்கள். ஆனால் வல்லநாட்டைச் சுற்றியுள்ள வல்லநாடு கஸ்பா, கீழவல்லநாடு, களியாவூர், வடவல்லநாடு, ஆலந்தா, பூவாணி, சிங்கத்தாகுறிச்சி, வடக்குகார்சேரி, எல்லைநாயக்கர்